| | | |
|---|---|---|
| சாட்சி : DW2<br>திரு. மதியழகன்<br>த.பெ. திரு. சந்தனம் | அ.வ.எண். 92/2016 | 23.06.2025 |

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) எனக்கு ஜார்ஜ்எட்மெண்ட்பிளிக்ஸ் எனக்கு நண்பர் என்றால் சரியல்ல, நாங்கள் ஒரே தெருவில் குடியிருக்கிறோம். குழந்தைராஜன் சாகுபடி செய்து வந்த சர்வே எண்.112/2 ல் மூங்கில் மரங்கள் கொத்தாக இருந்தது என்றால் சரியல்ல. இது தொடர்பாக கல்லக்குடி காவல் நிலையத்தில் என் பெயரில் புகார் இருந்ததா என்றால் இல்லை. எனக்கும் குழந்தைராஜ்க்கும் ஏற்பட்ட பிரச்சனையில் நான் கல்லக்குடி காவல் நிலையத்திற்கு சென்றேன் என்றால் சரியல்ல.

2) வாதி குழந்தைராஜக்கும், 1ம் பிரதிவாதி ஜார்ஜ் எட்மெண்ம் ஸ்பெளிக்ஸ்க்கும் எப்போது சண்டை வந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கில் நான் ஒரு பிரதிவாதி என்பது தெரியும் என்றாலும், இவ்வழக்கில் எனக்கு அழைப்பாணை வந்தது என்றாலும் சரிதான். வழக்கு தாக்கல் செய்த பிறகே வழக்கு சொத்தை பொறுத்து எனக்கு கிரைய ஆவணம் ஏற்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கில் வாதியை வழக்கு சொத்தின் சுவாதீனத்திலிருந்து மிரட்டி வெளியேற்றவே, 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தை பொறுத்து என் பெயருக்கு கிரைய ஆவணம் ஏற்படுத்தி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

3) உண்மையான பிரதிபலனுக்காக புல எண்.112/2 ல் கண்ட சொத்தில் என் பெயருக்கு ஏற்படுத்திக்கொடுக்கப்படவில்லை என்றாலும், சுவாதீனம் எதுவும் என்னிடம் ஒப்படைக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. கிரைய தொகை எவ்வளவு என்றால் ரூ.58,000/– (ரூபாய் ஐம்பத்து எட்டாயிரம்).

மேற்படி தேதியில் ரூ.58,000/–ஐ 1ம் பிரதிவாதியிடம் செலுத்தியதற்கு நான் ரசீது எதனையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி தேதியில் ரூ.58,000/–தொகை என்னிடம் இருந்ததற்கும் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் வீட்டில் சேமித்து வைத்திருந்த தொகை அது.

4) புல எண்.112/2 யை பொறுத்து நான் உண்மையான உரிமையாளர் என்றாலும், அதில் நான் உண்மையிலேயே சாகுபடி செய்தேன் என்றாலும், மேற்படி புல எண்ணை பொறுத்து என் பெயருக்கு வருவாய் ஆவணங்கள் ஏற்படவில்லை என்றாலும், நான் பயிர் கடன் எதுவும் பெறவில்லை என்பதால் வருவாய் ஆவணங்கள் எதுவும் என் பெயரில் ஏற்படவில்லை. நான் உண்மையிலேயே சாகுபடி செய்திருந்தால் நான் அதற்கான வருவாய் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், என் பெயரில் மேற்படி ஆவணங்கள் பெயரளவில் ஏற்படுத்தப்பட்டுள்ளதாலும், மேற்படி சொத்தில் நான் சாகுபடி செய்யவில்லை என்பதாலும், நான் அதற்கான வருவாய் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

5) நான் இவ்வழக்கில் 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக வழக்கு சொத்தை பொறுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் வாதி கோரியப்படி பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மற்றும் அவரது குடும்பத்திற்கு சொந்தமான சொத்துககளை பொறுத்து, வாதி கிரைய சொத்தை தவிர்த்து இதர சொத்துக்களை குத்தகைதாரர் நிலையில் வாதி சாகுபடி செய்துவருகிறார் என்றால் சரியல்ல.

6) இவ்வழக்கில் வாதி கோரியப்படி வாதிக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.